**V. NARAYANASAMY**
CHIEF MINISTER
GOVERNMENT OF PUDUCHERRY

सत्यमेव जयते

✆ Off. : 0413-2333399, 2335530
2335328
Fax : 0413-2333135
Res. : 5, Ellaiamman Koil Street
Puducherry-605 001
✆ 0413-2339099
e-mail : cm.pon@nic.in

Date :

No.1959/CM/Mssg/2017/35 22.12.2017

# கிருஸ்துமஸ் வாழ்த்துச் செய்தி

கருணையையும் ஜீவகாருண்யத்தையும் மக்கள் அனைவருக்கும் போதித்திட புவியினில் அவதரித்த தேவதூாதர் இயேசு கிருஸ்துவின் பிறந்ததினமே கிருஸ்துமஸ் பண்டிகையாக உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. பெத்தலகேம் நகரில் புனித மரியன்னையின் மகனாகப் பிறந்த இயேசு கிருஸ்து அன்பையும் இரக்கத்தையும் மனிதர்களுக்கு போதித்தார். கருணை வடிவாய் அவர் நிகழ்த்திய அற்புதங்கள் அனைருக்கும் அன்பு காட்டிய பாங்கு, தீங்கு செய்தவர்களையும் மன்னித்து ஏற்றுக்கொள்ளும் மனம் ஆகியவற்றால் உலகம் முழுவதும் அறியப்பட்ட அவரின் கொள்கைகள் மதமாக மாறி இன்றுவரை மனிதகுலத்திற்கு வழிகாட்டியாக விளங்குகிறது.

கிருத்துவர்கள் நம்நாட்டில் கல்வி, மருத்துவம் ஆகிய துறைகளில் ஆற்றிய சேவைகள் அளப்பரியன. கிருஸ்து சமுதாயத்தினர் கல்வி நிறுவனங்கள் நடத்தியும் மருத்துவமனைகளை உருவாக்கியும் புதுச்சேரி மாநில மக்களுக்கு தன்னலமற்ற சேவைகளை செய்து வருகிறார்கள். அன்பின் திருவுருவம் அன்னை தெரேசா அவர்கள் நம்நாட்டு மக்களுக்கு கருணையோடு செய்த சேவைகளை யாரும் மறந்திடவோ மறுக்கவோ இயலாது. மதவேறுபாடுகளைக் கடந்த சேவைகளுக்குச் சொந்தக்காரர்கள் கிருத்துவர்கள் என்றால் அது மிகையல்ல. அதேபோல் மாற்றுமதத்தினரும் தேவாலயம் சென்று வரும் சகோதரத்துவம் மிகுந்த நாடு நம் பாரதநாடு.

....2/-

(தொடர்பக்கம்)



கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு நான் ஜெருசலேம் சென்று இயேசுபிரான் அவதரித்த இடத்தில் டிசம்பர் மாதம் 24-ஆம் தேதி இரவு 12மணிக்கு பிரார்த்தனை செய்கின்ற அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதை என் வாழ்நாளில் கிடைத்த பெரும் பாக்கியமாக நான் கருதுகிறேன்.

கருணையின் இலக்கணமாய் திகழும் கிருஸ்துவ மக்கள் அனைவரும் வளமுடனும், நலமுடனும் வாழ இந்நாளில் இறைவனை வேண்டிகிறேன். புதுச்சேரி மாநிலத்தில் உள்ள அனைத்து கிருஸ்துவ சகோதர சகோதரிகளுக்கும் எனது இனிய கிருஸ்துமஸ் தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வே.நாராயணசாமி.

(வே. நாராயணசாமி)